# தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

## தொலைநிலைக் கல்வித் தேர்வு

## தேர்வுக் கட்டணம் – கால நீட்டிப்பு செய்தல்

## அறிவிக்கை

நாள்: 14.05.2024

தமிழ்ப் பல்கலைக்கழகத் தொலைநிலைக் கல்வி இயக்ககத்தில் 2008 இல் இருந்து சேர்க்கை செய்யப்பெற்று இதுவரை நடத்தப்பட்டத் தேர்வுகளில் கலந்து கொள்ளாத அல்லது தேர்ச்சி பெறாமல் இருக்கும் முதுநிலை, இளநிலை, இளங்கல்வியியல் முதுநிலைப்பட்டயம்/ பட்டயம்/ சான்றிதழ்/அறிமுகநிலை/ தொடக்கநிலை/ அடிப்படைநிலை ஆகிய மாணவர்களுக்கு அவர்களது கல்வித் தகுதியை நிறைவு செய்ய இறுதி வாய்ப்பினை உருவாக்குவதற்கு மே 2024 பருவ இறுதித் தேர்வுக்கு கட்டணம் செலுத்தும் தேதி 13.05.2024 வரைத் தண்டக் கட்டணம் இன்றிச் செலுத்த கால நீட்டிப்பு செய்யப்பட்டது. தற்போது மாணவர்களின் நலன் கருதி மேலும் 14.06.2024 வரை தண்டக்கட்டணம் இன்றியும் 12.07.2024 வரை உரிய தண்டக் கட்டணத்துடனும் விண்ணப்பங்கள் பெறப்படும் என்ற விவரம் தெரிவிக்கப் பெறுகிறது.

மாணவர்கள் இந்த அரிய இறுதிவாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் பெறுகிறது. இதுவே இறுதி வாய்ப்பாகும். தேர்வுக்கால அட்டவனை பின்னர் இணையத்தில் வெளியிடப்படும்.

15/05/2024

பதிவாளர் (பொ).

14/5/24